

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.11.2024) தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை (TNCF) நிதியிலிருந்து, வாள்வீச்சு வீராங்கனை செல்வி பி. சசிபிரபா தென்கொரிய நாட்டில் நடைபெற உள்ள சர்வதேச அளவிலான வாள் வீச்சு விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்வதற்கு, போட்டிக்கான நுழைவுக் கட்டணம் மற்றும் போட்டியில் கலந்து கொள்வதற்கு செலவினத் தொகையாக ரூ.2,00,000/–க்கான காசோலையினை வழங்கினார். உடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, ஆகியோர் உள்ளனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.11.2024) எகிப்து நாட்டில் நடைபெறும் சர்வதேச பாரா பேட்மின்டன் போட்டியில் கலந்துகொள்ளவுள்ள ஜெகதீஷ்டில்லிக்கு, நுழைவுக் கட்டணம் உட்பட செலவினத் தொகை ரூ.1,79,000/–க்கான காசோலையினை தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து வழங்கினார். உடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி ஆகியோர் உள்ளனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.11.2024) தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை (TNCF) நிதியிலிருந்து வருகிற 01.12.2024 முதல் 08.12.2024 வரை மலேசியாவில் நடைபெறவுள்ள 10வது ஆசிய பசிபிக் காது கேளாதோர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்ளும் வீரர், வீராங்கனைகளுக்கு போட்டியில் கலந்து கொள்வதற்கு செலவினத் தொகையாக ரூ.2,20,000/க்கான காசோலையினை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, சங்க நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (16.11.2024) சென்னை எழும்பூர், மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கில் நடைபெற்ற 14–வது ஹாக்கி இந்தியா சீனியர் ஆண்கள் தேசிய சாம்பியன்ஷிப் 2024 இறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற ஒடிசா அணி வீரர்களுக்கு தங்க பதக்கத்தை அணிவித்து, கோப்பையை வழங்கினார். இவ்விழாவில் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, ஹாக்கி இந்தியா தலைவர் திலீப் டிர்கி, ஹாக்கி இந்தியா பொருளாளர் மற்றும் தமிழ்நாடு ஹாக்கி சங்கத்தின் தலைவர் சேகர் மனோகரன், பொதுச் செயலாளர் முனைவர் செந்தில் ராஜ்குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பாரா ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்ற

# பேட்மிண்டன் வீராங்கனை செல்வி துளசிமதி முருகேசனுக்குப் பாராட்டு விழா!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது!

*சென்னை, நவ.18 -*

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில், செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரத்தில், உலக சிறு விலங்குகள் கால்நடை மருத்துவ சங்கம் (WSAVA CE) மற்றும் இந்தியாவின் சிறு விலங்கு பயிற்சியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பின் (FSAPAI) சார்பில், பாரா ஒலிம்பிக்கில் வெள்ளிப்பதக்கம் வென்ற பேட்மிண்டன் வீராங்கனை செல்வி துளசிமதி முருகேசன் அவர்களுக்கு பாராட்டு விழா நடைபெற்றது.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 15.11.2024 அன்று செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரத்தில் நடைபெற்ற 21 வது உலக சிறு விலங்குகள் கால்நடை மருத்துவ சங்கத்தின் தொடர் கல்வித் திட்டம் (WSAVA CE) மற்றும் இந்தியாவின் சிறு விலங்கு பயிற்சியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பின் (FSAPAI) கருத்தரங்க நிகழ்ச்சியில், பாரா ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்ற பாரா பேட்மிண்டன் வீராங்கனை செல்வி துளசிமதி முருகேசன் அவர்களுக்கு பாராட்டு விழா நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்ததாவது:-

இந்த 21வது உலக சிறு விலங்குகள் கால்நடை மருத்துவ சங்கத்தின் தொடர் கல்வித் திட்டம் மற்றும் இந்தியாவின் சிறு விலங்கு பயிற்சியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பின் 14வது தேசிய கருத்தரங்கை துவக்கி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

இங்கே பரா பாட்மிட்டன் வீராங்கனை தங்கை துளசிமதியின் சாதனைகளை அனைவரும் போற்றி பாராட்டி உள்ளீர்கள். தங்கை துளசிமதி அவர்கள், காஞ்சிபுரம் மாவட்டத்தில் மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்து, தன்னுடைய திறமையின் மூலம், விளையாட்டுத்துறை இட ஒதுக்கீட்டில் B.V.Sc (Bachelor of Veterinary Science) சேர்ந்து படித்துக் கொண்டிருக்கிறார்.

**2 கோடி ரூபாய் ஊக்கத் தொகை!**

சமீபத்தில் நடைபெற்ற பாரா ஒலிம்பிக்கில் வெள்ளிப்பதக்கம் வென்று தமிழ்நாட்டுக்கு பெருமைத் தேடித் தந்துள்ளார். சர்வதேச அளவிலான போட்டிகளில் தொடர்ந்து ஏராளமான பதக்கங்களை குவித்து வருகிறார்.

சமீபத்தில், நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பாரா ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்றதற்காக தங்கை துளசிமதி அவர்களுக்கு உயர் ஊக்கத்தொகையாக 2 கோடி ரூபாய் வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில் தங்கை துளசிமதி அவர்களை அனைவரும் பாராட்டுவதை பார்க்கும் போது, விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் அமைச்சராக மட்டுமல்லாமல், அவருடைய உடன்பிறவா அண்ணனாகவும்,, நான் பெருமையும் மகிழ்ச்சியும், அடைகிறேன். அவரை இத்தருணத்தில் வாழ்த்துகின்றேன்.

உலகெங்கிலும் உள்ள கால்நடை மருத்துவர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பயிற்சியாளர்களுக்கு நுண்ணறிவுகளைப் பரிமாறிக் கொள்ளவும், புதுமைகளைப் பகிர்ந்து கொள்ளவும், சிறிய விலங்கு பராமரிப்பில் சமீபத்திய முன்னேற்றங்கள் குறித்து விவாதிக்கவும் இந்த சிம்போசியம் அவசியமான தளமாக உள்ளது.

கால்நடை நிபுணர்களாக, உங்கள் பொறுப்பு தனிப்பட்ட சிறு விலங்குகளுக்கு சிகிச்சை அளிப்பதைத் தாண்டி, பொது சுகாதாரத்தை மேம்படுத்துதல், செல்லப்பிராணி உரிமையாளர்களுக்கு கல்வி கற்பித்தல், விலங்குகள் மற்றும் அவற்றின் பராமரிப்பாளர்களின் உடல் நலனை பேணுகின்ற பொறுப்பும் உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கால்நடை மருத்துவர்களுக்கு மனநலத்தின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்த விரும்புகிறேன். உங்களுடைய தொழில், பெரும்பாலும் உணர்வுரீதியாகவும், உடல்ரீதியாகவும் சவாலானதாகும்.

இந்த நிகழ்ச்சியை நடத்துவதற்காக தமிழ்நாடு சிறு விலங்குகள் பயிற்சியாளர்கள் சங்கத்தின் முயற்சிகளை நான் வாழ்த்துகிறேன். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் கீழ், கால்நடைகளின் நலனை மேம்படுத்துதல் மற்றும் கால்நடைகளுக்கான மாநில சுகாதார உள்கட்டமைப்பை வலுப்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு தமிழ்நாடு அரசு வெளியிட்ட சில குறிப்பிடத்தக்க அறிவிப்புகளை பகிர்ந்து கொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

**ரூ. 1 கோடியில் ரேபிஸ் தடுப்பூசி!**

ஒரு முக்கிய நடவடிக்கையாக, கால்நடை பராமரிப்புத் துறையின் ஒருங்கிணைந்த சுகாதாரத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது, இதில், 5 லட்சம் தெரு விலங்குகளுக்கு ரேபிஸ் தடுப்பூசி 1 கோடி ரூபாய் செலவில் 50% மானியத்துடன் போடப்படும். இம்முயற்சி நமது விலங்குகளின் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பது மட்டுமல்லாமல், வெறிநாய்க்கடி பரவுவதைத் தடுப்பதன் மூலம் பொது சுகாதாரத்திற்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கும்.

மேலும், 400 கால்நடை மருத்துவர்களுக்கு ரூ.1 கோடி செலவில் விரிவான திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டத்தை வழங்குவதற்கான அறிவிப்பையும் முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு வெளியிட்டுள்ளது. கால்நடை மையங்களில் நவீன நோயறிதல் கருவிகளைக் கையாளும் நிபுணத்துவத்தை மருத்துவர்களுக்கு அளிப்பதை நோக்கமாகக் கொண்டு இந்த பயிற்சித் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. கால்நடை மருத்துவ நிபுணர்களை புதிய தொழில்நுட்பங்களுடன் மேம்படுத்துவதன் மூலம் தமிழ்நாடு விலங்குகளின் ஆரோக்கியம் மற்றும் நலனில் முன்னணியில் இருப்பதை உறுதி செய்கின்றோம்.

இந்த முற்போக்கான நடவடிக்கைகள், விலங்குகளுக்கு ஆரோக்கியமான, பாதுகாப்பான மற்றும் நிலையான சூழலை உருவாக்குவதற்கான தமிழ்நாடு அரசின் உறுதிப்பாட்டை பிரதிபலிக்கின்றன. இந்த கருந்தரங்க நிகழ்ச்சியானது, விலங்குகளின் வாழ்க்கையை வளப்படுத்த அர்த்தமுள்ள விவாதங்களில் ஈடுபட உதவும் என்று நான் நம்புகிறேன். இந்த கருத்தரங்கம் சிறப்பாக நடைபெற எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சியில் பாராட்டப்பட்ட தங்கை துளசிமதி அவர்கள் விளையாட்டுத்துறை, கால்நடை மருத்துவத்துறை என இரண்டிலும் இன்னும் பல உயரங்களைத் தொட நம்முடைய திராவிட மாடல் அரசும், முதலமைச்சர் அவர்களும் என்றும் அவருக்கு துணை நிற்பார்கள். அவரது சாதனைகள் தொடரட்டும் என்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம், சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை கூடுதல் தலைமை செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாதரெட்டி, மாவட்ட ஆட்சித் தலைவர் ச.அருண்ராஜ், தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் மரு.கே.என்.செல்வகுமார், இந்தியாவின் சிறு விலங்கு பயிற்சியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பின் (FSAPAI) தலைவர் மரு.ஆர்.ஜெயபிரகாஷ், தமிழ்நாடு சிறு விலங்கு பயிற்சியாளர்கள் சங்க தலைவர் மரு.ஜெ.வெங்கடேஷ், மற்றும் மரு.டி.சுரேஷ், மரு. பி.ஸ்ரீதேவி உள்பட கால்நடை மருத்துவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியின் கீழ் 13 விளையாட்டு வீரர்-வீராங்கனைகளுக்கு

# வெளிநாடு போட்டிகளில் பங்கேற்க நுழைவுக் கட்டணம் - தங்குமிட செலவுகளுக்கு ரூ.5,99,184 காசோலை!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, நவ.18 -

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் டி.என் சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியின் கீழ், 13 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு வெளிநாடுகளில் நடைபெற உள்ள போட்டிகளில் பங்கேற்பதற்காக, போட்டிகளுக்கான நுழைவுக்கட்டணம், பயணம் மற்றும் தங்குமிட செலவுகளுக்காக மொத்தம் ரூ.5,99,184-க்கான காசோலைகளை வழங்கினார்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.11.2024) டி.என் சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியின் கீழ், 13 விளையாட்டு வீரர், வீராங்கனை களுக்கு வெளிநாடுகளில் நடைபெற உள்ள போட்டிகளில் பங்கேற்பதற்காக போட்டிகளுக்கான நுழை வுக்கட்டணம், பயணம் மற்றும் தங்குமிட செலவுகளுக்காக மொத்தம் ரூ.5,99,184-க்கான காசோலைகளை வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டு விளையாட்டு வீரர், வீராங்கனைகள் வெளிநாடுகளில் நடைபெறுகின்ற போட்டிகளில் பங்கேற்கும் செலவுகளை மேற்கொள்ள இயலாமையால், போட்டிகளில் பங்கேற்க முடியாமல் தவிக்கின்ற சூழலை மாற்றிட, தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையை உருவாக்கி, அதன் மூலமாக வெளிநாடுகளில் பங்கேற்க வாய்ப்பு கிடைத்த விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு அந்த போட்டிகளில் பங்கேற்றிட, போட்டிகளுக்கான நுழை வுக் கட்டணம், பயணம் மற்றும் தங்குமிட செலவுகளுக்கான நிதியினை வழங்க உத்தரவிட்டுள்ளார்.

இதுவரை சொந்த செலவிலும், தனியார் நிறுவனங்கள், மற்றும் அமைப்புகளின் நிதியுதவியிலும் மட்டுமே போட்டிகளில் பங்கேற்று வந்த தமிழ்நாட்டின் விளையாட்டு வீரர், வீராங்கனைகள், தற்போது பல்வேறு வெளிநாட்டு போட்டிகளில் எளிதாக கலந்து கொள்ள கிடைத்த வாய்ப்பின் காரணமாக, தங்கள் திறமையை வெளிப்படுத்தி, பதக்கங்கள் வென்று திரும்பும் நிலை உருவாகியுள்ளது.

அதனடிப்படையில், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 2024-ஆம் ஆண்டு வருகின்ற 01.12.2024 முதல் 08.12.2024 வரை மலேசியாவில் உள்ள கோலாலம்பூரில் நடைபெறவுள்ள 10வது ஆசிய பசிபிக் காது கேளாதோர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் கலந்துக் கொள்ள உள்ள 11 விளையாட்டு வீரர் / வீராங்கனைகளுக்கு போட்டிக்கான மொத்தத் தொகை ரூ.2,20,000/க்கான காசோலையை வழங்கினார்.

தென்கொரிய நாட்டில் நடைபெற உள்ள சர்வதேச அளவிலான வாள் வீச்சு விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்ள உள்ள வாள்வீச்சு வீராங்கனை செல்வி. பி. சசிபிரபா அவர்களுக்கு விமான கட்டணம், தங்கும் இடம் செலவினம் மற்றும் போட்டிக்கான நுழைவு கட்டணத்திற்கான தொகை ரூ. 2,00,000/க்கான காசோலையையும் வழங்கினார்.

தொடர்ந்து எகிப்து நாட்டில் நடைபெறும் சர்வதேச அளவிலான பாரா பேட்மிட்டன் போட்டிகளில் கலந்து கொள்ள பாரா பேட்மிட்டன் விளையாட்டு வீரர் ஜெகதீஸ்டில்லி, அவர்களுக்கு சென்று வருவதற்கான விமான கட்டணம், தங்கும் இடம் செலவினம் மற்றும் போட்டிக்கான நுழைவு கட்டணத்திற்கான தொகை ரூ.1,79,184/ க்கான காசோலை என இன்று மொத்தம் 13 விளையாட்டு வீரர், வீராங்கனைளுக்கு மொத்தம் ரூ.5,99,184/க்கான காசோலைகளை “TN Champions Foundation“ அறக்கட்டளை நிதியில் இருந்து தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, சங்க நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




நியூஸிலாந்து நாட்டில், ஆக்லாந்து நகரிலுள்ள தமிழ்ச் சங்கத்தின் சார்பில் 15–11–2024 அன்று நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சியில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார்.